# வாழ்வதற்கு ஒரு வாழ்வு
# (1 தீமோத்தேயு 2)

*"நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது" (1 தீமோ. 2:3).*

தேவனுடைய வசனமானது அதன் மாபெரும் இரட்சிக்கும் வல்லமையுடன், ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகிய இரு சாராருக்கும் வாழ்வின் நடையொன்றை முன் வைக்கின்றது. இயல்பாகவே தேவன், பாவிகளில் முதன்மையானவரை இரட்சிக்கவும், அவரைத் தம்முடைய ஊழியத்திற்கு நியமிக்கவும் விருப்பம் கொண்டிருந்தார் என்றால் (1:12-16), தேவன் *எல்லா* மக்களும் இரட்சிக்கப்பட(வும்) விரும்புவாரே (2 பேது. 3:9). தேவனுடைய பெரிதும் விரிவானதுமான திட்டமானது மனிதர்களை ஜெபிக்க[1] அழைக்கின்றது (2:1, 2), மத்தியஸ்தர் ஒருவரையும் செய்தியையும் அளிக்கிறது (2:3-7), மற்றும் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அறைகூவல் விடுக்கும் வாழ்வு நடை ஒன்றை முன்னிறுத்துகிறது (2:8-15).

## பாடம் 4: ஜெபத்தின் ஒப்புயர்வற்ற நிலை (2:1, 2)

### வாழ்வின் ஒவ்வொரு பகுதிக்காகவும் ஜெபம் (வ. 1அ)

சர்வ சிருஷ்டிக்கும் செல்லும்படியாகக் கிறிஸ்து அளித்த கட்டளையானது (மாற். 16:15, 16) எல்லைக்குட்பட்ட சிந்தையினால் புரிந்து கொள்ள எப்பொழுதுமே மிகப் பெரியதாயிருக்கும். நமக்கு தேவனுடைய உதவி தேவை. ஆகையால், பவுல் தீமோத்தேயுவுக்கும் நமக்கும், "எல்லாவற்றிற்கும் முதலாவதாக" ஜெபிக்கும்படி புத்தி கூறினார்.

எல்லா மனிதர்களையும் நாம் சென்றடைகின்ற பொழுது, ஜெபம் என்பது ஒப்புயர்வற்ற தேவையாக உள்ளது. ஜெபம் என்பது வேண்டுதல்களை[2] உள்ளடக்கிய கூறுகளின் எல்லையைக் கொண்டுள்ளது. எந்த வழியில் செல்ல வேண்டுமென்று குழம்பிய நிலையில் நம்மையே நாம் காணும் பொழுது, தெய்வீக உதவிக்கான தேவையை நாம் உணர்ந்தறிகின்றோம் (2 கொரி. 3:4, 5; மத். 7:7, 8ஐக் காணவும்). ஆகையால், நாம் "ஜெபங்களை"[3] ஏறெடுக்கின்றோம். தேவனிடம் பேசுவதற்கான ஒரு இயல்பான விருப்பத்

தினால் நமது வேண்டுதல்கள் விளைகின்றன. ஜெபம் என்பது அடிப்படையில் அப்படிப்பட்டதாகவே உள்ளது. தேவனுடனான நமது பேச்சானது "பரிந்துரைகளை"[4] உள்ளடக்கியிருக்கலாம். ஜெபமானது உண்மையான தேவை (ஒரு வேண்டுதல்) மற்றும் ஒற்றுமை (தேவனுடைய சித்தம் மேற்கொள்ளுவதை விரும்புகின்ற ஆவி; மத். 26:39, 42; யோவா. 5:30; 6:38ஐக் காணவும்.) ஆகியவற்றை விளக்கப்படுத்துகிறது. தேவனுடன் ஊழியம் செய்து கொண்டு, உதவிக்கு அவரை அழைத்தல் என்பது எவ்வளவு மகிமைக்குரிய சிலாக்கியமாக உள்ளது!

*நீங்கள் ஒரு அரசரிடம் வருகின்றீர்கள்*
*நீண்ட வேண்டுகோள்களைக் கொண்டுள்ளீர்கள்;*
*இவ்வளவு அதிகமானவற்றை வேறேவரும் கேட்க முடியாது*
*அவருடைய கிருபையும் வல்லமையும் அவ்வளவாயுள்ளது.*[5]

ஜெபத்தின் மூலமாக வரும் இந்த மாபெரும் சாத்தியக்கூறுகள் "நன்றி செலுத்துதலை"[6] உள்ளடக்க நமது ஜெபங்களுக்கு ஒரு இயற்கையான தேவையை உருவாக்குகின்றன. தேவனுடன் ஊழியம் செய்யும் தேவையையும் சிலாக்கியத்தையும் நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், நாம் "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே எப்பொழுதும் எல்லாவற்றிற்காகவும் பிதாவாகிய தேவனை ஸ்தோத்தரிக்க" (எபே. 5:20) வேண்டும் என்ற பவுலின் கட்டளையானது எவ்வளவு ஏற்புடையதாக உள்ளது.

## எல்லா மக்களுக்காகவும் ஜெபம்
## (வ. 1ஆ, 2அ)

நாம் எங்கு சென்றாலும், நாம் ஜெபிக்க வேண்டிய தேவையற்ற ஒரு நபரை நாம் ஒருக்காலும் சந்திக்க மாட்டோம். ஜெபம் என்பது "எல்லா மனிதர்களுக்குமானதாக" உள்ளது.

"இராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும்" நாம் ஜெபிக்கையில் (2:2) நம்மை ஆளுகின்றவர்கள் மீது சிறப்பான புரிந்து கொள்ளுதல் தரப்பட வேண்டியது அவசியம். கிறிஸ்தவர்கள் எங்கு வாழ்ந்தாலும் அல்லது எவருடைய ஆட்சியின் கீழ் வாழ்ந்தாலும் இந்தப் புத்திமதிக்கு மகிழ்வுடன் பதில்செயல் செய்ய முடியும். வில்லியம் பார்க்ளே பின்வருமாறு குறிப்பிட்டார்:

> ஜெபம் நமக்களிக்கின்ற பரந்த அளவிலான சாத்தியக் கூறுகளினால் அவர்கள் இவ்விதம் செய்ய முடியும். ஆளுபவர் பொல்லாதவராயிருந்தால், அவரது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள். அவர் உக்கிரமானவராயிருந்தால், அவரது (மன) நலனுக்காக/தெளிவுக்காக ஜெபியுங்கள். அவர் காமம் நிறைந்தவராயிருந்தால், அவரது தூய்மைக்காக ஜெபியுங்கள். அவர் நோயுற்றிருந்தால், அவரது உடல்

நலனுக்காக ஜெபியுங்கள். அவர் அழுத்தத்தின் கீழிருந்தால், அவர் சகிப்புத் தன்மையும் தன்னடக்கமும் கொண்டிருக்கும்படி ஜெபியுங்கள். அவர் நல்லவராயிருந்தால், அதே வழியில் நிலைத்திருக்கும்படி அவரது சீர்த்தன்மைக்காக ஜெபியுங்கள்! தெர்த்துலியன் பின்வருமாறு எழுதினார்: "கிறிஸ்தவர் எந்த மனிதருக்கும் விரோதியல்ல, பேரரசரின் மிகத் தாழ்ந்த வரும் கூட தேவனால் நியமிக்கப்பட்டவர் என்று நாம் அறிந்துள்ளபடியால், நாம் அவரை அன்புகூர வேண்டும், மதிக்க வேண்டும், மற்றும் மரியாதை செலுத்த வேண்டும், மற்றும் அவரது பேரரசு முழுவதையும் சேர்த்த பாதுகாப்பை விரும்ப வேண்டும் என்பது அவசியமாக உள்ளது ..."[7]

## புயலற்ற, விரோதமற்ற சூழ்நிலைக்காக ஜெபம் (வ. 2ஆ, இ)

நாம் ''சலனமற்ற''[8] மற்றும் ''அமைதியான''[9] வாழ்வை அடைய ஜெபிக்கின்றோம். "சலனமற்ற நிலை" என்பது புயலற்ற ஒரு இடத்தை விவரிக்கின்றது. "அமைதி" என்பது விசேஷமாக மனித பதில்செயல்கள் மற்றும் விரோதம் ஆகியவற்றிலிருந்து விடுதலையை எடுத்துரைக்கின்றது. வசனங்கள் 3 முதல் 5 வரையிலும் பவுல் கொடுத்த - எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும் சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும் வேண்டும் என்ற - தேவனுடைய நல்ல இலக்கை மக்களும் சூழ்நிலைகளும் இடையூறு செய்யக் கூடும்.

விரும்பத்தக்க சூழ்நிலைக்கான திறவுகோலானது இரு ஒழுக்க நெறிகள் மேற்கொண்டிருக்கும் நிலைக்கானதாக உள்ளது: ''எல்லா பக்தி'' (தேவனிடமிருந்து பெறப்படுவது) மற்றும் "நல்லொழுக்கம்"[10] (ஒருவர் மற்றவருக்கு அண்மையில் கொண்டு வரப்படுதலில் பெறுதல்). "நல்லொழுக்கமான" நபர் "இந்த உலகமே ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறது என்பது போல ... உலகத்தினூடே கடந்து செல்லுகின்றார். அவர் தேவனுடைய பரிசுத்தத்தையோ அல்லது மனிதனின் மாண்பையோ ஒருக்காலும் மறப்பதில்லை. அவர் தேவனிடத்திலும் மனிதரிடத்திலும் சரியான எண்ணப்போக்குடையராய் இருக்கின்றார்."[11]

வன்முறை, தீவிரவாதம், பயமுறுத்துதல்கள், களவு, கற்பழிப்பு, கருக்கலைப்பு, பாலியல் தவறுகளின் அனைத்து வகைகள், மற்றும் உள்நாட்டுப் போர் ஆகியவை நாம் சுவாசிக்கும் காற்றைப் போன்று பொதுவானவைகளாய் இருக்கும் பொழுது இன்றைய நாளின் சுவிசேஷகர்கள் இந்த நிலைமைகளுக்காக ஜெபிக்கும்படி கிறிஸ்தவர்களை வற்புறுத்துவது எவ்வளவு ஏற்புடையதாக உள்ளது! இரவு வேளைகளில் தெருக்களில் தனியாக நடக்கத் தயங்குமளவுக்கு அவர்கள் தங்கள் சக மனிதர்களிடம் அவ்வளவு கலக்கமும் நம்பிக்கையின்மையும் கொண்டிருக்கும்பொழுது, மக்கள் ''நற்செய்தியை'' கவனிப்பது கூட சுலபமாய் இருப்பதில்லை! சுவிசேஷ ஊழியத்திற்கு ஏற்ற சூழ்நிலைக்காகப் பவுல் வேண்டுகோள் விடுத்தார். இன்றைய நாட்களில் நாம் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்காக ஜெபிக்காதிருந்தால், அதைப் பெற மாட்டோம்.

## *பாடம் 5: ஒரு திட்டத்தின் அளிப்பு (2:3-7)*

### எல்லா மக்களுக்குமான ஒரு திட்டம் *(வ. 3, 4)*

ஜெபம் மட்டுமல்ல, தேவனுடைய திட்டமும் எல்லாருக்குமான தாகவே உள்ளது. எல்லா மக்களும் "இரட்சிக்கப்படுவதற்கு" அவருடைய கிருபையானது போதுமானதாக உள்ளது. இயேசு எல்லாருக்காகவும் மரித்தார் *(2 கொரி. 5:14, 15)*, நம்மை எல்லாரிடத்திலும் அனுப்பினார் *(மாற். 16:15, 16; மத். 28:18-20)*, மற்றும் சுவிசேஷத்தை எல்லாருக்கும் கிடைக்கச் செய்தார் *(யூதா 3)*. சுவிசேஷத்தினாலே நாம் யாவரும் நியாயந்தீர்க்கப் படுவோம் *(ரோமர் 14:10-12; 2 கொரி. 5:10)*.

ஆத்துமாக்களைப் பாவத்திலிருந்து இரட்சித்தல் என்பது கடந்த காலத்தைச் சுத்திகரிக்கின்றது *(அப். 2:38; 22:16)*. எல்லாரும் "சத்தியத்தை அறிகிற அறிவை அடைய வேண்டும்" என்பதும் தேவனுடைய திட்டமாக உள்ளது *(2:4)*. மிகப் பெரும்பாலோர், தாங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற பிறகு அந்த வலிவான பகுதியில் தயார் செய்து, பக்குவப்படும் சகோதரர்கள் ஆகுதல் என்ற நிலையை அடையத் தவறி யுள்ளார்கள் *(மத். 28:18-20; 1 பேது. 1:22-2:2)*. சகோதரர்கள் அறியாமையில் நிலைத்திருப்பதைப் பவுல் விரும்பவில்லை *(1 கொரி. 10:1; 12:1)*. *அவர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய திறனுக்கு ஏற்றபடி அவர்களுக்குப் பவுல் போதித்தார் (1 கொரி. 3:2; யோவா. 16:12, 13; எபி. 5:11-14)*. பக்குவம் வாய்ந்த சகோதரர்களின் இந்த ஊழியத்தைச் செய்ய அதிகமான சுவிசேஷகர்கள் தங்களைத் தயார் செய்து கொண்டு - பிறகு அதைச் செய்கின்ற வரையிலும், பலவீனமான சகோதரர்கள் இருத்தல் என்பது சாதாரணமானதாயிருக்கும், மற்றும் நாம் தொடர்ந்து, பக்குவமற்ற சபைகளைக் கொண்டிருப்போம்!

### ஒரே ஆதார மூலத்திலிருந்து வருகின்ற ஒரு திட்டம் *(வ. 5)*

இரட்சிப்புக்கான தெய்வீக திட்டமானது ஒரே தேவனிடமிருந்து ஒரே மத்தியஸ்தர் மூலமாக, எல்லாருக்கும் ஒரே (வகையான) மீட்பை அளிக்கின்றதாக உள்ளது. இந்த மாபெரும் திட்டத்திற்கு ஒரே தேவனே ஆதார மூலமாக இருக்கிறார். மனித குலத்தில் ஒருமைப்பாடு உள்ள நிலையைக் கொண்டு வருமுன்பு, நமது "ஒரே தேவனின்" தெய்வீகத்து வமானது புரிந்து கொள்ளப்பட/அங்கீகரிக்கப்பட வேண்டும். யெகோவா யூதர்களின் தேவனாக மட்டுமின்றி, புறஜாதியார்களுக்கும் தேவனாக இருக்கின்றார் *(ரோமர் 3:29, 30)*. இன்னொருவர் ஏன் தேவை? மனிதனுக்கு அவர் நித்தியமானவராயிருக்கிறார் *(சங். 90:1, 2; யோவா. 1:1-3)*, சர்வ வல்லமை நிறைந்தவராயிருக்கிறார் மற்றும் எல்லாம் அறிந்தவராயிருக்கிறார் *(யோபு. 42:1, 2; 1 தீமோ. 6:15; சங். 66:5-7)*. தேவன்

அன்பாயிருக்கிறார் (1 யோவா. 4:8). நாம் ஒரே தேவனுடன் உறவுகொள்ளக் கூடும் என்பதில் நாம் அகம் மகிழ வேண்டும்.

| | |
|---|---|
| அவர் எல்லார் மேலும் இருக்கிறார் | அவரது வல்லமை |
| அவர் எல்லாரோடும் இருக்கிறார் | அவரது அருளிரக்கம் (எபே. 4:6; 2 கொரி. 2:14) |
| அவர் எல்லாருக்குள்ளாகவும் இருக்கிறார் | அவரது பிரசன்னம் |

## ஒரே இரட்சகருடனான ஒரு திட்டம் (வ. 6)

இந்தத் திட்டத்தின் இரட்சகர், "ஒரே மத்தியஸ்தராய்"[12] இருக்கிறார். வேண்டுதல் செய்கின்றவர்கள் பலர் இருக்கலாம் (1 தீமோ. 2:1, 2; ரோமர் 8:26, 27 ஆகியவற்றைக் காணவும்), ஆனால் ஒரே ஒருவரே மத்தியஸ்தராக இருக்கின்றார். அந்த ஒருவர் ஆணாக இருக்கிறாரே தவிர பெண்ணாக இருப்பதில்லை. சிலர் அவருடைய (இயேசுவினுடைய) தாயான மரியாளை அந்த (மத்தியஸ்தி என்ற) நிலையில் வைக்க நாடுகின்றனர். இருப்பினும், மரியாள் தேவனை கர்த்தர் என்று மேன்மைப்படுத்தி, அவரை "என் இரட்சகராகிய தேவன்" என்று கூறி அகம் மகிழ்ந்தாள் (லூக். 1:46, 47). யோவான் 2:5ல் மரியாள், "அவர் (இயேசு) உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள்" என்று மனிதர்களிடம் கேட்டுக் கொண்டதைக் காண்கின்றோம். இந்த நிகழ்ச்சியில் அவள் செய்தபடியும் கவனத்திற்குக் கொண்டு வந்தபடியும் நாம் செய்ய வேண்டும். தேவனுக்கும் மனிதருக்கும் இடையில் உள்ள அந்த ஒரே மத்தியஸ்தருக்குப் பதிலீடு செய்பவளாக மரியாள் ஒருக்காலும் காணப்படக் கூடாது.[13]

இந்த ஒரே மத்தியஸ்தர் அல்லது பரிந்து பேசுபவர் எல்லாரையும் மீட்கும் பொருளாக (செலுத்தப்பட்ட விலைக்கிரயமாக; 1 யோவா. 2:1, 2ஐக் காணவும்) ஆனதால் நமது மீட்பு சாத்தியமாயிற்று. இது என்ன ஒரு (முரண்பாடு போலத் தோன்றும்) மெய்யுரையாக உள்ளது! பாவம் எதுவும் செய்திராதவர் எல்லாருடைய பாவங்களையும் தம்முடைய சரீரத்தில் சுமந்தார் (1 பேது. 2:21-24). மீட்கும் பொருளானது அவருக்கு எவ்வளவு நியாயமற்றதாகவும், ஆனால் அந்த மீட்பானது நமக்கு எவ்வளவு மகிமையுடையதாகவும் உள்ளது (1 பேது. 1:18-21; எபி. 4:15, 16; 7:25-27; எபே. 1:3-7)! இதன் விளைவாக நாம், நன்றியுள்ள இருதயங்கள் கொண்டவர்களாக, நமக்கு நிறைவளித்த ஆதார மூலத்தையும், இரட்சகரையும் என்றென்றும் துதிப்பவர்களாக இருக்க வேண்டும் (வெளி. 5:9-14; 7:9-12).

## சுவிசேஷகரான பவுலினால் அறிவிக்கப்பட்ட ஒரு திட்டம் (வ. 7)

பவுல் ஒரு "பிரசங்கியாராக"[14] நியமிக்கப்பட்ட பொழுது அந்த

*நியமனத்தினால்*[15] அவர் இந்தத் திட்டத்தின் அங்கமானார். பிரசங்கியார் என்ற வகையில் அவர் இன்னொருவரின் செய்தியை தெரிவித்தல் அல்லது அறிவித்தல் என்பதே பெருமளவில் அவரது பணிப் பொறுப்பாயிற்று.

பவுல் ஒரு *"அப்போஸ்தலராகவும்"*[16] நியமிக்கப்பட்டார். இது, அவர் கட்டளைகளைச் செயல்படுத்துகிறவராய் மட்டுமின்றி அந்தக் கட்டளை களைக் கொடுத்து அனுப்பியவரைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரத்தை யும் கொண்டிருந்தார் என்று அர்த்தப்படுகின்றது (யோவா. 13:20; 17:8, 18-21; மத். 10:40ஐக் கவனிக்கவும்).

அத்துடன் கூடுதலாக, பவுல் ''ஒரு போதகராயிருக்கும்படியும்'' நியமிக்கப்பட்டார். இந்த மூன்று நியமனங்களும் ஒன்று மற்றொன்றிலிருந்து வேறுபட்டதாகக் கண்ணோக்கப்பட வேண்டுமென்றால், பிரசங்கியார் செய்தியை *அறிவிப்பவராக* இருப்பார்; அப்போஸ்தலர் கேட்பவர்களுக்கு தெய்வீக அதிகாரத்தினால் அதன் (செய்தியின்) முக்கியத்துவத்தை *உறுதிப்படுத்துபவராக* இருப்பார்; மற்றும் போதகர் - தமது பணியில் நிபுணத்துவம் வாய்ந்தவர் என்ற வகையில் - பகிர்ந்து கொள்ளப்பட்ட தகவல் அல்லது கொடுக்கப்பட்ட கட்டளைகளை மாணவர் *உறுதிப்படுத்திக் கொள்ளக் கூடியவராக்குவார்.* பிரசங்கியார், கேட்பவர்களின் கவனத்தைப் பெறுவார், அப்போஸ்தலர் பாடக் கருத்தின் தீவிரத்தன்மையை அவர்களின் சிந்தைகளில் பதியச் செய்வார், மற்றும் போதகர் செய்தியின் சாரத்தைத் தெளிவு படுத்துவார் (அப். 8:29-39; ரோமர் 10:13-15ஐக் காணவும்). பவுல் நிச்சயமாகவே இவை யாவற்றையும் செய்யத் திறனுள்ளவராயிருந்தார்.[17] அவர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்பதையும் ("விசுவாசத்தில்"; 2:7; 1:4, 5, 19; 2 கொரி. 5:7), எங்கு/எதில் நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் ("சத்தியத்தில்"; யோவா. 14:6; 2 பேது. 2:21, 22; சங். 119:105) மற்றவர்களுக்கு அறிவுறுத்தக் கூடியவராக அவர் இருந்தார்.

இந்த அதிகாரத்தில் ஏழு வியூகமான பகுதிகள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன, மற்றும் சுவிசேஷகர்கள் இவற்றின் மீது கவனம் செலுத்த வேண்டியது அவசியமாக உள்ளது: (1) ஜெபம், (2) எல்லா மக்களைப் பற்றிய உணர்வு, (3) தேவனுடைய திட்டத்தை அங்கிகரித்தல், (4) கிறிஸ்துவின் நிலைப்பாடு (ஒரே மத்தியஸ்தர்), (5) பவுலின் நோக்கம் மற்றும் அறிவிப்பு, (6) மனித செயல்முறை ("நம்முடைய விசுவாசம்"; 1 யோவா. 5:4), மற்றும் (7) குறிப்பிடப்பட்ட பாதை (யோவா. 5:39, 40; 2 யோவா. 9).

## பாடம் 6: ஆண்கள் மற்றும் பெண்களுக்கான மாதிரி (2:8-15)

### ஆண்களின் நடக்கை (வ. 8)

ஜெபத்தின் முக்கியத்துவமானது இந்த சந்தர்ப்பப் பொருளில் இன்னமும் ஒரு வலியுறுத்தமாக உள்ளது. புருஷர்கள்[18] ஜெபிக்க வேண்டும்

(''எல்லா இடங்களிலும்''; 2:8) என்று பவுல் விரும்பினார். இவ்வாறு எழுதுவதில் பெண்கள் சில இடங்களில் ஜெபிக்க வேண்டியதை நீக்கிப் போடுதல் என்பது பவுலின் நோக்கமல்ல, ஆனால் ஆண்கள் எந்த இடத்திலும் ஜெபிக்கத் தயாராயிருக்க வேண்டும் என்பதை ஊக்குவித்தலே அவருடைய நோக்கமாயிருந்தது. ஒரு சமுதாய ஆராதனை ஊழியத்தில் மற்ற சில குழுவின் மதத் தலைவர் இருக்கும் பொழுது ஜெபித்தல் பற்றி ஆர்வமிக்க கலந்துரையாடல்கள் நிகழ்ந்துள்ளன. இன்னொரு மதக்குழுவின் ஆராதனை கூட்டத்திற்குச் சென்று, "ஜெபத்தில் வழிநடத்தும்படியான" அழைப்பை (கிறிஸ்தவர்) ஒருவர் ஏற்க முடியுமா? ஜெபத்தில் ஒருவர் என்ன கூறுகின்றார் என்பதும், அதை அவர் எவ்வாறு கூறுகிறார் என்பதும் சத்தியத்தினாலும், பரத்திலிருந்து வரும் ஞானத்தினாலும் சோதிக்கப்பட வேண்டியது எப்பொழுதும் அவசியமாய் இருக்கலாம், மற்றும் நாம் நமது செல்வாக்கானது தவறான முறைமைகளையோ அல்லது தவறுகளை மேம்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க வேண்டும்; ஆனால் பவுல், ஆண்கள் *எல்லா இடங்களிலும்* ஜெபிக்க வேண்டும் என்று ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட விருப்பத்தை அறிவித்தபொழுது இந்தக் கேள்விகளைத் தீர்த்து வைத்தார்.

சிறைச்சாலையில் கடின இருதயமுள்ள குற்றவாளிகள் கவனித்துக் கொண்டிருக்கையில் பவுல் ஜெபித்தார் (அப். 16:24, 25). நம்மைத் துன்புறுத்துபவர்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (மத். 5:44). நாம் ஒருவர் மற்றவருக்காக ஜெபிக்க வேண்டும் (யாக். 5:16-18). நாம் எல்லாவற்றிற் காகவும் எப்பொழுதும் நன்றி செலுத்த வேண்டும் (எபே. 5:20). நாம் ''இடைவிடாமல்'' ஜெபிக்க வேண்டும் (1 தெச. 5:17). ஆகையால், புருஷர்கள் எல்லா இடங்களிலும் ஜெபிக்க வேண்டும் என்று பவுல் விரும்பியதில் வியப்பெதுவும் இல்லை!

ஜெபிக்கும் புருஷர்களின் பண்பும் நடக்கையும் பவுலின் முக்கிய அக்கறையாய் இருந்தன. புருஷர்கள் "பரிசுத்தமான கைகளை" உயர்த்தும் படி பவுல் அழைத்தார். யூதர்கள் அடிக்கடி இவ்வகையான தோற்றத்தி லேயே ஜெபித்தனர். "பரிசுத்தமான கைகள்" என்பதே தேவன் விரும்பும் நிபந்தனையாக உள்ளது.

''பரிசுத்தமான''[19] கைகளையுடைய மனிதர், (யோசேப்பு செய்தது போல) தாம் எங்கிருந்தாலும் தேவனைப் பற்றிய உணர்வு கொண்டவரா யிருப்பார் (ஆதி. 39:9; சங். 18:20-24; யோபு 1:1, 8; 2:3; சங். 33:1; நீதி. 11:3, 6, 11, 20). இவ்விடத்தில் பவுல், ரோமர் 16:16ல் வாழ்த்துதலில் ஒரு வழி முறையாக முத்தமிடுதலை அவர் வலியுறுத்தியதைவிட அதிகமாக ஜெபத்திற்கான தோற்றநிலையை வலியுறுத்தவில்லை. மாறாக, நமது ஜெபங்களும், நமது வாழ்த்துதல்களும், மற்றும் நமது வாழ்வும் பரிசுத்தமா யிருக்க வேண்டுமென்றுதான் அவர் வலியுறுத்தினார்!

ஜெபம் என்பது ''பரிசுத்தமான கைகளுடன்'' இருக்க வேண்டிய நிலையில், அது வேறு இரு விஷயங்கள் "இல்லாததாக" இருக்க வேண்டி யிருந்தது. முதலாவது, இது "கோபம்"[20] அற்றதாயிருக்க வேண்டியுள்ளது. பவுல், ''பரிசுத்தமான கைகளை''ப் பற்றிப் பேசிய பிறகு, இந்த

எச்சரிக்கையில் ''வெளிச் சென்றடைதல்'' தொடர்புடைய ஒரு வார்த்தையைப் பயன்படுத்தினார். எந்த சூழ்நிலையிலும், விசேஷமாக அழுத்தங்களும் துன்பங்களும் சந்திக்கின்ற பொழுது ஒருவர் தம் கைகளை (தீமை செய்யாதபடி) காத்துக் கொள்ளுதல் என்பது மிகவும் இடர்ப் பாடுள்ளதாக இருக்கிறது! இரண்டாவது, நமது ஜெபங்கள் "வாக்குவாத மற்றதாக"[21] இருக்க வேண்டும். கிறிஸ்தவர்கள் விரோதத்தைத் தூண்டக் கூடாது. தேவையற்ற விவாதங்களை நாம் கூட்டிக் கொள்ளாமலேயே இராஜ்யத்திற்குள்ளேயும் வெளியேயும் போதுமான அளவு தவறுகள் நமக்கு அறைகூவல் விடுக்கும். (மத். 22:15-22, 46; லூக். 23:39, 40; யோவா. 8:1-6ஐக் காணவும்.)

இவ்விடத்திலும் ரோமர் 14:16-19 வசனப் பகுதியிலும் பவுல் கூறிய புத்திமதிகளை எல்லா சகோதரர்களும் கற்றுக் கொண்டால் துக்கமற்ற பல இரவுகளும் கண்ணீர்க் கறைபடிந்த தலையணைகளும் தவிர்க்கப்படக் கூடும்.

## பெண்களின் நடக்கை (வ. 9, 10)

அடுத்து பவுல், பெண்களுக்குக் குறிப்பிட்ட வழிகாட்டுதல்களைக் கொடுத்தார். கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் மட்டுமின்றி, எல்லாப் பெண்களும் மென்மையான இந்த இனத்தாரும் பகிர்ந்து கொள்ளும்படி பவுல் தீமோத்தேயுக்கு அளித்த அறிவுரைகளுக்குக் கவனம் கொடுப்பதன் மூலம் பயனடைவார்கள். இந்தப் பண்புகள் பெண்களை தவறான வாழ்வும் கட்டுப்பாடற்ற உணர்வுகளும் கொண்ட உலகத்தில், உடை மற்றும் நடக்கையில் தனிச் சிறந்தவர்களாக அடையாளப்படுத்தும்.

இந்தத் தெளிவான வசனப்பகுதியானது பெண்ணின் உடை, அவளது எண்ணப்போக்கு, அவளது நடவடிக்கை, மற்றும் ஆண்களுடன் அவளுடைய தொடர்பு ஆகியவற்றை எடுத்துரைக்கின்றது. இவை யாவும், பெண்கள் எவ்விதம் இரட்சிக்கப்பட முடியும் என்பதை அடையாளப் படுத்தி, பெண்களுக்கு ஒரு மகிமையுள்ள புகழுரையும் உச்சகட்டத்தை அடைகின்றன.

### அவளது உடை

பெண்கள் தங்களைத் தகுதியான உடைகளினால் ''அலங்கரிக்க''[22] வேண்டுமென்று கர்த்தர் விரும்புகிறார். இந்த எளிய கூற்றானது நான்கு பாடங்களை அடக்கியுள்ளது: (1) பெண்களின் அழகும் வசீகரமும் அக்கறை மற்றும் கவனிப்பு தரப்பட வேண்டும் என்று தேவன் நோக்கம் கொண்டார். (2) பெண்களின் உடையில் - ஒழுக்க ரீதியான மற்றும் ஆவிக்குரிய - அழகும் வசீகரமும் அடையாளப் படுத்தப்பட வேண்டும். (3) பெண்கள் தங்களை அலங்கரிக்க வேண்டும் - அதாவது தயாராக, ஆயத்தமாக இருக்க வேண்டும். ஒழுங்கு படுத்தாத, அலங்கோலமான, சீரில்லாத எந்த நிலையிலும் அவர்கள் தோற்றமளிப்பதை இது விலக்குகிறது. (4) பெண்கள் தன்னடக்கமான உடைகள், நன்கு ஏற்பாடு செய்யப்பட்ட, மதிப்புக்கும் கனத்துக்கும் உரிய

உடைகளை தேர்ந்தெடுக்க வேண்டும். இந்த சந்தர்ப்பப் பொருளானது, பவுல் மற்றும் தீமோத்தேயு ஆகியோரின் நாட்களில் இருந்த "மயிரைப் பின்னுதல் மற்றும் பொன்னினாலாவது, முத்துக்களினாலாவது, விலையேறப் பெற்ற[23] வஸ்திரங்களினாலாவது அலங்கரித்தல்" என்பதின் தவறான பயன்பாட்டை அடையாளப் படுத்துகிறது.

உடைகள் பற்றிய இந்தக் கூற்றுக்கள் சார்புடைய விஷயங்களாகவும், காலத்திற்குக் காலம், கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் மாறக் கூடியவையாகவும் உள்ளன என்பது தெளிவு. முதலில், ஆதாமும் ஏவாளும் ஏதொன்றும் அணிந்திருக்கவில்லை, மற்றும் அவர்கள் வெட்கப்படாதிருந்தார்கள் (ஆதி. 2:25). தேவன் அவ்வகையிலேயே அவர்களைப் படைத்திருந்தார், மற்றும் அது நல்லதாகவே இருந்தது (ஆதி. 1:26, 27, 31). அவர்கள் கீழ்ப்படியாமற் போன பிறகு தேவன் ஆடைகளை ஏற்படுத்தி அவர்களுக்கு அணிவித்தார், அப்பொழுது அது(வும்) நல்லதாகவே இருந்தது (ஆதி. 3:21).

பவுலின் நாட்களில் "தகுதியான வஸ்திரம்" என்று அழைக்கப்படக் கூடிய சில விஷயங்கள் இருந்தன. மற்றும் அதே விஷயமானது ஒவ்வொரு காலத்திற்கும் உண்மையாக உள்ளது. தேவனைப் பிரியப்படுத்த நாடுகின்ற ஒவ்வொரு பெண்ணும் தன்னை இவ்விதமாய் அலங்கரித்துக் கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மிக அதிகமான அல்லது மிகக் குறைவான எல்லைகள் தவிர்க்கப்பட வேண்டியவைகளாய் உள்ளன.[24] அதிகமான பொன், அதிகமான முத்துக்கள் மற்றும் மிகவும் விலையுயர்ந்த ஆடைகள் "தேவபக்தியை"[25] அறிக்கையிடும் பெண்களுக்குத் தகுதியானவையல்ல. மிகக் குறைவான உடைகள் அல்லது ஆண்கள், பெண்களை இச்சையுடன் நோக்க வைக்கின்ற இறுக்கமான உடைகள் "மதிப்புக்குரிய" அல்லது "கனத்திற்குரிய" உடையாய் இருக்கும் தராதரத்தைச் சந்திக்க முடியாது (மத். 5:27, 28ஐக் காணவும்). பெண்களே, உங்கள் ஆடை அல்லது உடை என்பதை மட்டுமின்றி அதை அணிவதில் உங்கள் எண்ணப்போக்கையும் கூட பவுல் இவ்விடத்தில் முறைப் படுத்தினார் அல்லது கட்டளையிட்டார்.

## அவளது எண்ணப்போக்கு

"தன்னடக்கம் மற்றும் தெளிந்த புத்தி" (2:9) ஆகியவற்றின் உள்ளான பண்புகளுடன் உடையணிதல் என்பதே பெண்கள் சரியான உடையணி தலின் உண்மையான திறவுகோலாக உள்ளது.

"தன்னடக்கம்"[26] என்பதன் உள்ளான பண்பானது எவ்வளவு வளமுடையதாகவும் பலன் அளிப்பதாகவும் உள்ளது. எனவே இங்கு கிறிஸ்தவ சகோதரிக்கு உள்ளான சோதனைக்களம் உள்ளது. அவள் உடையில் தன்னையே கட்டுப்படுத்துவதன் மூலம் வெட்கக் கேட்டைத் தவிர்க்க முடியும் (2 சாமு. 11:2ஐக் காணவும்). இந்த அறிவுறுத்துதலானது, ஒரு சகோதரி தனது கலாச்சாரத்தில் தன்னடக்கமான உடை எது என்பது பற்றி தனக்குத்தானே அறிவு புகட்டிக் கொள்ளுவதையும், தூய்மையின் உணர்வுடன் இருப்பதையும் கேட்டுக் கொள்கிறது. தக்க வகையிலான எண்ணப்போக்கு என்பது அவள் தனது ஒழுக்கத்திற்கு வெட்கக்கேட்டைக்

கொண்டு வருகின்ற எந்த ஒரு ஆடை பற்றியும் உண்மையான முன்னெச்சரிக்கை கொண்டிருக்கக் காரணமாகி விடும்.

பண்பு என்பதற்கு "தெளிந்த புத்தி"[27] என்பதில் பவுல் கொடுத்துள்ள வசன ரீதியான தராதரத்தைப் பராமரிக்க வேண்டியது அவசியம் என்பது தெளிவாகின்றது. இவ்வார்த்தையானது தனக்குள் கட்டியெழுப்பப்பட்ட கட்டுப்பாட்டின் வல்லமையைக் கொண்டுள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில், இது, ஒரு சகோதரி (தனது) உடையைப் பற்றி முன்னெச்சரிக்கை உடையவளாய் அக்கறையுள்ளவளாய் இருக்கும்படி கேட்டுக் கொள்கிறது. தேவன் அப்படி இருக்கிறார்! எந்த ஒரு சகோதரியும் தெளிந்த புத்தியுடன் இருத்தல் என்பது மனதில் இலேசாய் நினைக்கக் கூடிய, சிந்தனையற்ற, அர்த்தமற்ற விஷயமாய் இருப்பதில்லை. அக்கறையற்று இருப்பவர்கள் தங்களுக்குக் கேடுபாடுகளையும் வேதனையையும் வரவழைத்துக் கொள்கின்றனர். "நான் எதை அணிகிறேன்/அணிய வேண்டும் என்று கூறுவது எவருடைய வேலையுமல்ல" என்று கூறுகிற இளம் (அல்லது முதிய) பெண் கர்த்தரைப் பற்றி மறந்து விட்டிருக்கின்றாள்!

தன்னடக்கம் மற்றும் தெளிந்த புத்தி என்ற இவ்விரு பண்புகளும், தகுதியான உடையைத் தீர்மானிக்கும் உண்மையான திறவுகோல்களாக உள்ளன. இந்த விஷயத்தில் பெண்களுக்கு உதவ விரும்பும் சுவிசேஷகர்கள் ஒவ்வொரு கிறிஸ்தவப் பெண்ணுக்குள்ளும் இவ்விரு பண்புகளும் போதிக்கப்பட்டு மேம்படுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்து கொள்ளுவார். உடையானது மரியாதைக்குரிய மற்றும் மதிப்புக்குரிய தோற்றத்தை முன்னிறுத்தும் வகையிலேயே இயல்பாய்த் தேர்ந்து கொள்ளப்படும்.

### அவளது செயல்பாடு

ஒரு பெண்ணின் உண்மையான வசீகரம் என்பது "நற்செயல்களின்" (2:10; எபே. 2:10) மூலமானதாக இருக்கட்டும். 1 தீமோத்தேயு 5:9, 10ல் பவுல், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரிகளுக்கு நற்செயல்களாக உள்ளவை எவை என்பது பற்றிக் கூடுதலான அறிவுறுத்துதல் கொடுத்தார். தேவபக்தியுள்ள பெண்கள் ஊழியம் செய்த மற்றும் ஊழியம் செய்ய வேண்டிய வழிகள் பல இருந்தன (அப். 5:12-16; 9:36-41; ரோமர் 16:1-5; பிலி. 4:2, 3 ஆகியவற்றைக் காணவும்). பெண்ணின் அழகினால் உடனடியாக ஆண்கள் கவரப்படுதல் என்பது அடிக்கடி நடக்கின்றது, ஆனால் தேவனால் வடிவமைக்கப்பட்ட "துணை" (ஆதி. 2:20) யின் நல்ல வாழ்வு மற்றும் செயல்களில் ஒழிந்து போகாத ஒரு வசீகரத்தை மனிதன் என்றென்றும் கண்டுள்ளான்.

## பெண்களின் கீழ்ப்படிதல் (வ. 11-14)

ஆண்களுடனான பெண்களின் இணைவை நாம் ஆழ்ந்து சிந்திக்கையில், *கீழ்ப்படிதல் என்பது உயர்த்தப்படுதலுக்கு வழிநடத்துகிறது* என்பதற்கு இங்கு இன்னொரு விஷயம் உள்ளது (எபே. 5:22; 1 பேது. 3:1-6; மத். 20:26-28). வசனங்கள் 11 முதல் 14 வரை பவுல் ஒரு இலக்கையும் வழிகாட்டுதலையும் முன்நிறுத்தினார்.

"ஒரு பெண் கற்றுக் கொள்ள வேண்டும்"[28] என்பது இலக்காக உள்ளது. பவுலின் வார்த்தைகளிலுள்ள படிப்படியான வளர்ச்சியின் இயல்பை நாம் ஜாக்கிரதையாய்க் கவனிப்போம். பெண்கள் கற்றுக் கொள்ளவும், முன்னேறவும் மற்றும் தகவல் அளிக்கப்படவும் வேண்டும் என்று அவர் விரும்பினார். ஒவ்வொரு காலத்திலும் மற்றும் கலாச்சாரத்திலும், அமைப்பு என்ற வகையில் கிறிஸ்தவமானது பெண்களை உயர்த்தி, பாதுகாத்து, அவர்களின் முன்னேற்றத்தை - மனித தராதரங்களினால் அல்ல, ஆனால் ஒழுக்க ரீதியான, ஒழுக்க நெறி ரீதியான, மற்றும் கல்வி ரீதியான வளர்ச்சியினால் - செயல்படுத்தத் தேர்ந்துகொண்டுள்ளது.

இதை அவள் "அடக்கமுடையவளாயிருந்து அமைதலோடு" (2:11)[29] செய்ய வேண்டும் என்பதே அந்தக் கற்றுக் கொள்ளுதலுக்கு வழிகாட்டியாக உள்ளது. ஒன்றுகூட்டிக் காண்கையில், பவுல் பெண்களை முறுமுறுத்தல், எதிர்செயல் புரிதல், விவாதம் பண்ணுதல் என்ற சூழ்நிலையில் இருந்து பாதுகாக்க நாடினார் என்பதை இந்தக் கருத்துக்கள் காண்பிக்கின்றன. அவ்வகையான சூழ்நிலையில் கற்றுக் கொள்ளுதல் அல்லது பணிந்திருத்தல் என்பது அரிதாகவே சாத்தியமாகிறது. ஆகையால், மக்கள் வலிவு நிறைந்த வார்த்தை வல்லமை அல்லது எதிர்செயல் புரியும் பதில்கள் ஆகியவற்றுடன் கருத்துக்களை முன்னிறுத்தச் சாய்வார்கள் என்றால், ஒரு பெண் கீழ்ப்படிதல் மற்றும் பணிந்திருத்தல் ஆகியவற்றின் பொறுப்பை நாடுவதினால் தனது மாபெரும் வல்லமை, கண்ணியம் மற்றும் சமாதானம் ஆகியவற்றைக் காண்பாள் (ரோமர் 12:20, 21). சத்தமிடுகிற, மேன்மைப் படுத்திக் கொள்ளுகிற ஒரு பெண் செயல்வலிவுடன் போதிக்கவும் மாட்டாள் கற்றுக் கொள்ளவும் மாட்டாள்.

பவுல் பெண்களுக்கான வழிகாட்டுதலில் "கீழ்ப்படிதல்"[30] அல்லது "பணிவு" என்ற நெறியை ஒரு பாகமாக ஏன் கொடுத்தார் என்பதைக் காண்பது முக்கியமானதாக உள்ளது. இது ஒருவருடைய தகுதியை அல்லது நபர்த்துவத்தை இரண்டாந்தரப்படுத்துவதில்லை. இயேசு தம்மையே மனிதர்களுக்கு மற்றும் மனிதர்களுக்காகக் கீழ்ப்படுத்தியதால் நாம் அவரைத் தாழ்வாக நோக்குகின்றோமா? (மத். 20:26-28; யோவா. 13:2-17).

பெண், (1) ஆண்களுக்கு (1 கொரி. 11:3), (2) தனது கணவருக்கு (எபே. 5:22; 1 பேது. 3:1-6), மற்றும் (3) சபையில் (1 கொரி. 14:34, 35) பணிந்திருக்க வேண்டும். இவற்றில் கடைசி விஷயத்தில், உச்ச அளவுக்குத் தாவுவதை எதையும் நாம் தவிர்ப்போமாக. பெண்கள் பணிந்திருக்க வேண்டும் என்பதே இந்த உறவுமுறைகள் எல்லாவற்றிலும் திறவுகோலாக உள்ளது. 1 கொரிந்தியர் 14:34, 35ல் பவுல் தமது கூற்றில் தகுதிப்படுத்தப் பயன்படுத்திய "கூடாது/ஆனால்" என்ற (வார்த்தை) கட்டமைப்பைக் கவனியுங்கள்:

> சபைகளில் உங்கள் ஸ்திரீகள் பேசாமலிருக்கக்கடவர்கள்; பேசும் படிக்கு அவர்களுக்கு உத்தரவில்லை; அவர்கள் அமர்ந்திருக்க வேண்டும்; வேதமும் அப்படியே சொல்லுகிறது. அவர்கள் ஒரு காரியத்தைக் கற்றுக் கொள்ள விரும்பினால், வீட்டிலே தங்கள்

புருஷரிடத்தில் விசாரிக்கக்கடவர்கள்; ஸ்திரீகள் சபையில் பேசுகிறது அயோக்கியமாயிருக்குமே.

இந்த வசனப் பகுதியானது, பெண்கள் எல்லா வேளைகளிலும் சபையில் அமைதியாய் இருக்க வேண்டும் என்று அறிவிக்கிறதா? அவள் பேசக் கூடாது ஆனால் அமைதியாயிருக்க வேண்டும் என்பது முற்றான கருத்தாக இருந்தால், பின்பு அவள் எப்படிப் பாட முடியும்? பாடுதல் என்பது, “சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் புத்திசொல்லிக்கொண்டு'' (எபே. 5:19) இருக்கும் விஷயமாய் உள்ளது என்பது தெளிவு. எப்பொழுதுமே ''ஸ்திரீகள் சபையிலே பேசுகிறது அயோக்கியமாய்” (1 கொரி. 14:35) இருந்ததென்றால், அவள் பாடுவதும் கூட அயோக்கியமாய் இருக்குமல்லவா?

பெண் என்பவள் (பவுல் அந்த சந்தர்ப்பப் பொருளில் போதித்த கொள்கையின்படி) பணிவு உள்ளவளாய் இருக்கும் காரணத்தினால் சபையின் ஆராதனை ஊழியங்களில் பாடக்கூடும் என்பது அனுமதி யளிக்கப்பட்டால், சபை ஆராதனையில் அவள் பணிந்திருத்தலுடன் இருக்கையிலேயே கிறிஸ்துவில் தான் கொண்டுள்ள விசுவாசத்தை அறிக்கை யிடுதலின் மூலம் அவள் பேச முடியுமா? அவள் தனது பாவங்களை அறிக்கையிட முடியுமா? எடுத்துக்காட்டாக, நோயுற்ற உறுப்பினர் ஒருவர் எப்படியிருக்கிறார் என்று அறிவிப்பாளர் யாரேனும் கேட்டால் (ஊழியம் மற்றும் பணிவு ஆவியுடன்) அவள் பதிலுரைக்க முடியுமா? அக்கூட்டத்தில் அறிவிப்பு செய்து கொண்டுள்ள மூப்பர் ஒருவர் பெண்களுக்கான வேதாகம வகுப்பின் வேளையைக் குறித்து சரியான நேரத்தை சகோதரி ஒருவரிடம் கேட்டு, அந்த சகோதரி சபை கூடுகையில் பேசுவதற்கு (பணிந்திருத்த லுடன்) அனுமதிக்கப்பட முடியுமா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்கள், 1 கொரிந்தியர் 14ன் சந்தர்ப்பப் பொருளில் பெண்கள் “அமைதியாய்” அல்லது “பேசாதிருக்க” வேண்டும் என்ற பவுலின் வலியுறுத்துதலானது ஒரே ஒரு விஷயத்துடன் தொடர் புடையதாக உள்ளது என்பதை விவரிக்கின்றன: அவள் பணிந்திருத்தலில் நிலைத்திருக்க வேண்டும். அங்கு மற்றும் அங்கு மட்டும் “அமைதி” மற்றும் “பேசாதிருத்தல்” என்ற வார்த்தைகள் ஏற்புடையவையாய் உள்ளன.

பணிந்திருக்கும் இந்த ஆவியைப் பராமரிக்கையில் பவுல், “உபதேசம் பண்ணவும், புருஷன்மேல் அதிகாரஞ் செலுத்தவும், ஸ்திரீயானவளுக்கு நான் உத்தரவு கொடுக்கிறதில்லை; அவள் அமைதலாயிருக்க வேண்டும்” என்றும் கூடக் கூறினார். (“கூடாது/ஆனால்” என்ற கட்டமைப்பின் மீதான அடிக்குறிப்பு எண் 23ஐக் காணவும்.) வேதாகமப் போதனையைப் பவுல் மறுத்துரைக்கவுமில்லை, அல்லது அவர், குறிப்பிட்ட சில துறைகளில் குறிப்பிட்ட வழிமுறைகளில் பெண்கள் போதிக்க முடியும் (தீத்து 2:3-5; அப். 18:24-26; 21:9; எபே. 6:1; 1 தீமோ. 5:14) என்ற தமது கருத்துக்கே முரண்படவுமில்லை. பெண்கள் போதிக்க முடியும், ஆனால் அதை அவர்கள் பணிந்திருக்கும் பணிநிலையிலேயே செய்ய வேண்டும் (“அதிகாரத்தைச் செயல்படுத்தும்”[31] பணிப் பொறுப்பைத் தவிர்த்தல்).

*பெண்களின் பணிந்திருத்தலுக்கான நிலையானது பழங்கால நிகழ்ச்சிகள் இரண்டின் மூலம் பவுலினால் மேலும் விளக்கப்படுகின்றது: (1) படைப்பின் ஒழுங்கு முறை - முதலில் ஆதாம் உண்டாக்கப்பட்டார், பிறகு ஏவாள் உண்டாக்கப்பட்டாள் (ஆதி. 1; 2); (2) தேவனுக்கு எதிராகக் கலகம் செய்தமையின் வரிசை முறை - பெண்தான் முதலில் விழுந்து போனாள் (ஆதி. 3:6-16). முதலாவது அந்த இருவரும் நிர்வாணமாயிருந்தது பற்றியும் பின்பு வீழ்ச்சிக்குப் பிறகு அவர்களுக்குத் தேவன் உடுத்துவித்தது பற்றியும் நாம் கேள்வி கேட்க முடிவதைக் காட்டிலும் அதிகமாக அவளது பணிந்திருத்தலுக்கு இந்த நிகழ்ச்சிகள் காரணங்களானது பற்றி நாம் மறுப்புத் தெரிவிக்க முடியாது. நம்மைப் பற்றி நாமே அறிந்துள்ளதை விட அதிகமாக நம்மைப் பற்றி அறிந்துள்ள ஒருவர் இவ்வகையில் பெண்கள் ஊழியம் செய்தலில் ஒரு உண்மை நெறியையும் மதிப்பையும் கண்டிருக் கிறார். (யோவா. 2:25; லூக். 12:2; வெளி. 2:13; யோபு 42:1, 2 ஆகிய வசனப் பகுதிகளைக் காணவும்.)*

## *பெண்களுக்கு ஒரு புகழுரை (வ. 15)*

*பவுலைப் பெண்களுக்கு எதிராக இருப்பவர் என்று முத்திரை யிடுபவர்கள் யாவரிடமிருந்தும் அவர் (பவுல்) தன்னை மீட்டுக் கொண்டார்: இரட்சகர் இவ்வுலகிற்கு வரும் வகையில் பெண்களைத் தேவன் தனிச் சிறப்பான வழியில் வடிவமைத்தார் என்று அவர் (பவுல்) வலியுறுத்தினார். வசனம் 15, "அப்படியிருந்தும், தெளிந்த புத்தியோடு விசுவாசத்திலும் அன்பிலும் பரிசுத்தத்திலும் நிலைகொண்டிருந்தால், பிள்ளைப்பேற்றி னாலே இரட்சிக்கப்படுவாள்" என்று கூறுகின்றது. இவ்விதமாக "பிள்ளைப் பேற்றினாலே" அவள் - மற்றும் மனிதகுலம் முழுமையும் - இரட்சிக்கப்படக் கூடும்.*

*இவ்வசனப் பகுதி எதைப் போதிப்பதில்லை என்பதைக் கவனியுங்கள். இவ்வசனப் பகுதியானது பிள்ளை பெறக்கூடிய தகுதி இரட்சிப்புக்கு அவசியமானது என்று போதிப்பதில்லை. இது, திருமணமாகாத பெண்ணுக்கு அல்லது திருமணமாகியும் ஒரு தகப்பனாக முடியாத கணவனைக் கொண்டுள்ள பெண்ணுக்கு எதை அர்த்தப்படுத்தும்? தனது சொந்த உடலின் நிலைமையினால் ஒரு குழந்தையைப் பெற முடியாத பெண்ணைப் பற்றிய விஷயம் என்ன? திருமணம் முடிக்குமுன் இறந்து போகின்ற ஒரு இளம் பெண்ணைப் பற்றிய விஷயம் என்ன? ஒரு பெண்ணின் இரட்சிப்பானது குழந்தை பெறக்கூடிய அவளது திறனைச் சார்ந்திருப்பது இல்லை.*

*"விசுவாசத்தில் நிலைத்திருந்தால்" என்ற சொற்றொடரிலிருந்து சிலர் உய்த்துணர்ந்திருப்பது போல ஒரு தாயின் இரட்சிப்பானது அவளது பிள்ளைகளின் விசுவாசத்தைச் சார்ந்திருப்பதில்லை. பெண்ணின் இரட்சிப் பானது அவளது சந்ததியின் விசுவாசத்தினால் தீர்மானிக்கப்படுகிறது என்ற உரிமைகோருதலானது வசனப் பகுதிகள் பலவற்றை மீறுகின்றது (எடுத்துக் காட்டிற்கு வெளி. 20:11-13). தாயைப் போலவே தந்தையும் தன் பிள்ளை களுக்குப் பொறுப்புள்ளவராயிருக்கின்றார் (எபே. 6:1-4ஐக் காணவும்).*

*2 கொரிந்தியர் 5:10 மற்றும் ரோமர் 14:12 ஆகிய வசனப் பகுதிகள், நாம் ஒவ்வொருவரும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்று காண்பிக்கின்றன. ஒரு குழந்தையின் விசுவாசமானது தாய்க்கோ அல்லது தகப்பனுக்கோ பதில் கொடுக்க முடியாது. சிலர் கீழ்ப்படிவார்கள் மற்றும் பிறர் கீழ்ப்படிய மாட்டார்கள் என்று மத்தேயு 10:35-37 மற்றும் லூக்கா 12:51-53 வசனப் பகுதிகள் அறிவிக்கின்றன. பெற்றோர்கள் கீழ்ப்படியாதிருந்து, ஆனால் அவர்களின் பிள்ளைகள் கீழ்ப்படிந்திருந்தால், அவர்களின் பிள்ளைகளினுடைய "விசுவாசத்திலும், அன்பிலும் பரிசுத்தத்தினாலான தெளிந்த புத்தியிலும்" உள்ள வாழ்க்கை யினால், அதன் அடிப்படையில் பெற்றோர்கள் இரட்சிக்கப்பட முடியுமா? உறுதியாகவே முடியாது.*

*மேற்கூறிய காரணங்களினால், "அவர்கள்" என்ற வார்த்தையானது பிள்ளைகளைக் குறிப்பதில்லை என்று நாம் காண முடியும். யாரேனும் ஒருவர், "பவுல் 'அவள்' (ஒருமை) என்று கூறியிருக்கையில் 'அவர்கள்' என்று பன்மையில் உள்ளதால் இவ்வார்த்தை பெண்ணைக் குறிப்பிட முடியாது" என்று கூறுவார்களேயானால், பவுல் "பிள்ளைகளைப் பெறுவதினாலே" (பன்மை) என்று கூறாமல், "பிள்ளைப் பேற்றினாலே"[32] (ஒருமை) என்று கூறியிருப்பதின் அடிப்படையில் அது வாரிசுகளையும் குறிக்க முடியாது என்று நான் பதில் அளிப்பேன்.*

*எனவே, "அவர்கள்" என்ற வார்த்தை யாரைக் குறிப்பிடுகின்றது? வசனம் 15ல் உள்ள "அவர்கள்" என்பது "விசுவாசத்திலும், அன்பிலும் பரிசுத் தத்திலும்" நிலை கொண்டிருந்தலால் இரட்சிக்கப்படக் கூடிய பெண்களைப் பொதுவாகக் குறிப்பிடுவதாயிருக்க வேண்டும். பவுல் "ஸ்திரீகளும்" (பன்மை) என்று பயன்படுத்திய வசனம் 9ல் தாம் அறிமுகப்படுத்திய கருத்தை இங்கு தொகுத்துரைத்தார்.*

*"பிள்ளைகளைப் பெறுவதினாலே காக்கப்படுதல்" என்ற சொற்றொடர் எவ்வாறு பயன்படுகிறது? இது சந்தர்ப்பப் பொருளுக்காக இல்லாதிருந்தால் கடினமானதாயிருக்கலாம். பணிந்திருத்தலின் விதியைப் பற்றிக் கலந்துரை யாடுவதற்குப் பவுல் ஏவாளை அறிமுகப்படுத்தினார். ஏவாளின் வீழ்ச்சியும் தோட்டத்தில் வெட்கக்கேடும் பெண்ணுக்கு அவமதிப்பை அடையாளப் படுத்துவதாயிருந்தால், பெண்ணின் மகிமையும் மாண்பும் கர்த்தருடைய தாயான மரியாளில் காணப்படுகிறது, அவளை மதிக்கவும், பாராட்டவும் தகும் என்று அவர் தொடர்ந்து குறிப்பிட்டார். அவளது பிள்ளைப் பேற்றின் மூலம் - "ஒரு" பிள்ளைப் பேற்றினால் அல்ல ஆனால் "பிள்ளைகளைப் பெறுவதினால்" - மீட்பர் பிறந்தார் (கலா. 4:4). இது பெண் பணிந்திருக்க வேண்டிய ஆணினால் நிறைவேற்றக் கூடாததாகும். பெண்ணின் மூலமாகவே கிறிஸ்து குழந்தையாக வந்தார், அவரே உலகத்தின் இரட்சகராயிருக்கும்படி அனுப்பப்பட்டார் (1 யோவா. 4:14).*

*ஆகையால், பெண்களின் இரட்சிப்பானது அவர்கள் பிள்ளைகளைப் பெறுவதைச் சார்ந்தது அல்ல, ஆனால் பரிசுத்த ஆவியினாலே பெண்ணிடம் பிறந்த தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவைச் சார்ந்ததாகவே உள்ளது (லூக். 1:30-35; மத். 1:18-23; ஆதி. 3:15; கலா. 4:4). சோதனைக்கும்*

*பாவத்திற்கும் இணங்குதல் என்பது பெண்ணின் வெட்கக்கேடாயிருந்தால், பெண்ணிடமிருந்து பிறந்த இரட்சகர் அவளது மகிமைக்குக் காரணரா யிருக்கிறார். பெண் மனிதகுலத்திற்குப் பாவத்தை அறிமுகப்படுத்தினாள் என்றால், அவளே இரட்சகரையும்[33] அறிமுகப்படுத்தினாள்!*

*ஆகையால் பெண்ணும், ஆணும் கிறிஸ்துவையும் அவருடைய உடன் படிக்கையையும் கண்ணோக்க வேண்டும். அவர்கள் பின்வரும் ஒழுக்க நெறிகளைத் தொடர்ந்து கடைப்பிடித்தால் அவரில் (அவர்களுக்கு) இரட்சிப்பு உள்ளது:*

*(1) "விசுவாசம்" - பலம் மற்றும் பாதுகாப்புக்காக; எபி. 11:1; எபே. 6:16; 1 யோவா. 5:4;*

*(2) "அன்பு" - தியாகம் நிறைந்த ஊழியத்திற்காக; யோவா. 15:13; 1 யோவா. 3:16-18;*

*(3) "பரிசுத்தம்"[34] நிலைத்து நிற்கும் ஊழியத்திற்காக;*

*(4) "தெளிந்த புத்தி" - ஊழியத்தில் இச்சையடக்கத்திற்காக.*

*இந்த மேன்மையான தர அளவையினால் ஊழியத்தில் நிலைத்துள்ள ஒரு சகோதரி "கிறிஸ்தவள்" (1 பேது. 4:14-16) என்ற பெயரை நன்கு அணிந்து கொள்ளுவாள்.*

*நாம் வாழும்படி தேவன் விரும்புகின்ற வாழ்வைக் குறித்து அதிகாரம் 2 எப்படிப்பட்ட ஒரு அறைகூவலை முன் வைக்கிறது! நாமும் தீமோத்தேயுவைப் போல "விசுவாசத்தையும் நல்மனச்சாட்சியையும்" (1:19) பற்றிக் கொண்டிருக்க வேண்டும். இந்த அதிகாரமானது, எல்லா மக்களும் இரட்சிக்கப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்பதை நாம் புரிந்து கொள்ளும்படி ஜெபம் நிறைந்த வேண்டுகோளுடன் தொடங்கிற்று, மற்றும் பவுல் இதை எல்லா மக்களும் எவ்வாறு இரட்சிக்கப்படக் கூடும் என்பது பற்றிய கிளர்ச்சியைத் தூண்டும் தொகுப்புரையுடன் முடித்தார்!*

*பக்குவமடைந்த மனிதர்களின் நடத்துவத்துவத்தை நமக்கு அளிப்பதற்கான தேவனுடைய திட்டத்தை அதிகாரம் 3 அழகிய முறையில் விரித்துரைக்கிறது. கர்த்தருடைய நித்திய உடன்படிக்கையில் அழைக்கப் பட்ட வாழ்வை வாழ நமக்கு உதவுவதற்கு இப்படிப்பட்ட நடத்துவத்துவம் நமக்கு அவசியமாகின்றது!*

---

*குறிப்புகள்:*

[1]*வசனங்கள் 1 முதல் 6 வரையில் உள்ள பகுதியில் பவுல் "எல்லா" என்ற வார்த்தையை ஆறு முறைகள் பயன்படுத்தியிருப்பதில் தேவனுடைய வெளி நோக்கின் மாபெரும் தன்மை மெய்ப்பிக்கப்படுகின்றது. தேவனுடைய இலக்கு மற்றும் கண்ணோக்கு ஆகியவை, எல்லா மக்களுக்காகவும் ஜெபிக்கும்படியும், எல்லா தேவபக்தியோடும் நல்லொழுக்கத்தோடும் வாழ்வதை நாடவும் வேண்டு மென்று நமக்குப் புத்தி கூறுகிறது, ஏனென்றால் எல்லாரையும் மீட்கும் பொருளாகத் தம்முடைய குமாரனைக் கொடுத்த தேவன் எல்லா மக்களும் மீட்கப்படவும் சத்தியத்தை அறியும் அறிவை அடையவும் சித்தமுள்ளவராயிருக்கிறார்!* [2]வேண்டுதல் (Gk.: *deesis*) - "ஒரு விருப்பம், கேட்குதல், வேண்டுகோள் ... கெஞ்சுதல், வேண்டுதல்"

(Edward Robinson, *A Greek & English Lexicon of the New Testament* [New York: Harper & Brothers, 1863], 158); *"சந்தர்ப்பப் பொருளில், சில குறிப்பிட்ட விஷயங்களில் தேவனுடைய உதவியை வேண்டிக் கேட்கின்ற ஜெபங்கள்"* (C. G. Wilke and Wilibald Grimm, *A Greek - English Lexicon of the New Testament,* trans. and rev. Joseph H. Thayer [Edinburgh, Scotland: T. & T. Clark, 1901; reprinted., Grand Rapids, Mich.: Baker Book House, 1977], 126). [3]*ஜெபித்தல்* (Gk.: *proseuchomai*) - *"தேவனுக்கு ஜெபத்தை அல்லது பொருத்தனையை ஏறெடுத்தல்"* (Robinson, 628). [4]*பரிந்துரை* (Gk.: *enteuxis*) - *"இடையிடுதல், கூடிப் பேசுதல்; உரையாடல் ... வேண்டுகோள் ... ஒரு மாநாடு அல்லது உரையாடுதல் ... ஒரு வேண்டுகோள்"* (Thayer, 218). [5]William Barclay, *The Letters to Timothy, Titus and Philemon,* The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1960), 66. [6]*நன்றி செலுத்துதல்* (Gk.: *eucharistia*) - *"நன்றி நிறைவுடைமை ... எல்லா நன்றியுணர்வுடனும் ... நன்றி செலுத்துதல் பொங்கி வழிதல் ... நன்றி செலுத்துதலில் பெருகுதல், 2 கொரி. 4:15"* (Walter Bauer, *A Greek - English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich [Chicago: University of Chicago Press, 1957], 328-29). [7]Barclay, 68. [8]*சலனமின்மை* (Gk.: *eremos*) - *"தொந்தரவு இல்லாத, அமைதியான"* (Robinson, 326). [9]*அமைதி* (Gk.: *esuchazo*) - *"நிர்ச்சலனமான, ஒய்வான ... ஒரு நாடு அல்லது மக்கள் சமாதானத்தில் இருப்பது போன்ற நிலை ... உழைப்பு அல்லது செயலில் இருந்து ஓய்ந்திருத்தல் ... ஒருவரின் அமைதியைப் பற்றியிருத்தல், அமைதியாய் இருத்தல்"* (Robinson, 327). [10]*நல்லொழுக்கம்* (Gk.: *semnotes*) - *"... பயபக்தி அல்லது மரியாதை, மேன்மை, நல்லொழுக்கம், கெம்பீரம், தூய நிலை ... மதிப்பு ... தூய்மை"* (Thayer, 573).

[11]Barclay, 71. [12]*மத்தியஸ்தம்* (Gk.: *mesiteuo*) - *"வழக்காடுகின்ற அல்லது உடன்படிக்கை ஏற்படுத்தியுள்ள குழுவினருக்கிடையில் மத்தியஸ்தராக/நடுவராகச் செயல்படுதல் ... இரு குழுவினருக்கிடையில் குறுக்கிடுவதால் சிலவற்றை நிறைவேற்றுதல், ... எனவே mesiteuo என்பது ஒருவர் தம் சுயத்தை வாக்களித்ததை, நிச்சயம் கொடுத்ததைக் குறிப்பிட வருகிறது"* (Thayer, 401). [13]*மரியாள் தொடர்பாகச் சிலர் ஏற்படுத்தியுள்ள தவறுகள், நாம் ஒரே மத்தியஸ்தரைக் கொண்டுள்ளதால் தேவனுக்கு முன்பாகக் கொண்டிருக்கக் கூடிய மகிமையான பலன்களிலிருந்து விலக்கி விடாதிருப்பதாக (யோவா. 14:1-6; 16:23, 24; 1 யோவா. 2:1-3). கிறிஸ்து நமக்காகச் செய்துள்ளது எவ்வளவு வனப்பு மிக்கது! "வார்த்தையிலிருந்து தரவழைக்கப்படுதலானது 'நடுவில்' யாரோ ஒருவர் நிற்கிறார் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது ... மனம் புண்பட்ட தேவனுக்கும் புண்படுத்திய பாவிக்கும் இடையில் மனப்பூர்வமாக ஒரு நிலைப்பாட்டைக் கிறிஸ்து மேற்கொண்டு, பாவி மேல் வர வேண்டிய தேவ கோபத்தைத் தாமே சுமந்து, அதனால் பாவியை விடுதலையாக்கும்படி செய்தார் ... இந்த சந்தர்ப்பப் பொருள் முழுவதும் இரட்சிப்பைக் குறித்துப் பேசுகிறது (வசனம் 4), மற்றும் மீட்கும் பொருளாக வந்த கிறிஸ்துவைக் குறித்தும் பேசுகிறது (வசனம் 6ல் காணவும்). மனதில் நிற்கும் விளக்கம் ஒன்று கலாத்தியர் 3:13ல் காணப்படுகிறது, 'கிறிஸ்து நமக்காக (அல்லது நம் மீதுள்ளவற்றிற்காக) சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக் கொண்டார்.' அவ்வசனப் பகுதியில் இரட்சகர் நம் மீது நிற்பவராக, அதாவது சாபம் அவர் மீது வீழ்கிறது, நாம் இரட்சிக்கப்படுகின்றோம். இருப்பினும் ... மத்தியஸ்தர் என்ற கருத்தானது இன்னும் ... விசாலமானதாக உள்ளது. இந்தத் திறனில் கிறிஸ்து பாவிகளைத் தேவனிடத்தில் சரியான சட்டரீதியான உறவுமுறைக்குத் திருப்புவதுடன்/மீளக் கட்டுவதுடன் அவர்களை 'சத்தியத்தின் அறிவுக்கு' (வசனம் 4) கொண்டு வருகிறார்; மற்றும் இந்த மகிமையுள்ள சத்தியத்திற்குச் சாட்சியும் அளிக்கச் செய்கிறார் (வசனம் 6). ஆகையால், அவர்*

*மனிதர்களுக்குச் சமாதானத்தை நிலைநாட்டி, வெளிப்படுத்துகிறார், நற்செய்தியை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி இணங்கச் செய்கிறார். அவர் இந்த இருமடங்கான கருத்தில் மத்தியஸ்தராக வெளிப்படுத்தப்பட்டு நிற்கிறார்"* (William Hendriksen, *A Commentary on 1 and 2 Timothy and Titus* [London: The Banner of Truth Trust, 1964], 97-98). [14]*பிரசங்கியார்* (Gk.: *kerux*) - *"வெளிப்படையான அதிகாரம் அளிக்கப்பட்ட ஒரு அறிவிப்பாளர், ஒரு செய்தியாளர், இவர் இராஜாக்கள், நீதிபதிகள், பிரபுக்கள், படைத் தளபதிகள் அல்லது பொதுவான அறிக்கைகள் அல்லது வேண்டுகோள் களைத் தந்தவர்களின் அலுவலக ரீதியான செய்தியை எடுத்துரைப்பவராகவும், மற்ற பல கடமைகளைச் செய்பவராகவும் இருக்கிறார் ... தேவனுடைய தூதுவர், மற்றும் தெய்வீக செய்தியை அறிவிப்பவர் அல்லது எடுத்துரைப்பவர்"* (Thayer, 346). [15]*"நியமித்தல்"* (Gk.: *etethen*, from *tithemi*) *என்று மொழிபெயர்க்கப்பட்ட வினைச் சொல்லானது செயப்பாட்டு வினையில் உள்ளது என்ற உண்மையானது, இந்த மகிமையுள்ள ஊழியம் பவுலுக்குத் தரப்பட்டது என்பதை அர்த்தப்படுத்துகிறது. அவர் தாமே இதைக் கற்பிதம் செய்து கொள்ளவில்லை. தேவன் நமக்கு ஒரு ஊழியத்தை ஒப்புவிக்கவோ அல்லது தரவோ இராதபட்சத்தில், நாம் ஒன்றும் செய்ய இயலாது (எபே. 2:10; யோவா. 15:5; பிலி. 2:12, 13).* [16]*அப்போஸ்தலர்* (Gk.: *apostolos*) - *"ஒரு பிரதிநிதி, செய்தியாளர், கட்டளைகளுடன் அனுப்பப்படும் ஒருவர்"* (Thayer, 68). [17]*மக்களின் உணர்வுகளைத் தொடுகின்ற நற்செய்தியை அறிவிக்க நன்கு தயார் செய்யப்பட்ட சில மனிதர்கள் அவரது அதிகாரத்திற்குச் சரணடைதலில் குறைவு படுதலினாலும் (லூக். 6:46ஐக் காணவும்; கட்டுப்படுத்தப் படாத செயலை விளைவித்தது), நன்கு அறிவுறுத்தப்பட்ட மற்றவர்கள் அவசியமான செயல் மற்றும் உணர்வுகளினால் எவரொருவரையும் உணர்வெழுச்சி பெறச் செய்யாததாலும் கிறிஸ்துவினிமித்தமான ஊழியமானது மிகவும் சேதப்படுத்தப்பட்டுள்ளது. (மாணவர்களை விழிப்புணர்வுடையவர்களாக்கி யிருந்தும், மற்றவர்கள் அறிய வரும்படி மேன்மையான ஊழியம் செய்யப் போதுமான அளவு அக்கறை கொள்ள இணங்காத நிலை). சட்டவியலும் அகநிலை உணர்வியலும் நற்செய்தியைக் கொண்டு வந்த செய்தியாளரின் நடக்கையாக அடிக்கடி கண்டறியப்படக் கூடும். சட்டவியலானது மக்களை மிகுந்த கட்டுக்கோப்புடையவர்களாய் இருக்க வழி நடத்தக் கூடும், ஆனால் அது அவர்களை அகமகிழ்வுள்ளவர்களாகவோ அல்லது நீதியுள்ளவர்களாகவோ வழிநடத்துவதில்லை. அகநிலை உணர்வியலானது ஆவியைத் தூண்டலாம், ஆனால் அதை அவருடைய தர அளவைக்கு ஒப்புவிக்காது, கண நேரக் கண்ணீர்களை அல்லது மெய்சிலிர்ப்புகளை உண்டாக்கலாம், ஆனால் சத்தியத்தினால் வாழ்வின் உண்மையான மாற்றத்தை உண்டாக்காது! தங்கள் ஊழியத்தில் இயேசு உருவகப்படுத்தியதையும் பவுல் வெளிப்படுத்தியதையும் சமான நிலைப்படுத்தக் கூடிய பிரசங்கியார்கள் பலரை நாம் பெறுவதற்குத் தேவன் நமக்கு உதவுவாராக.* [18]*"புருஷர்கள்"* (Gk.: *aner*) *என்ற திட்டவட்டமான வார்த்தையானது இவ்விடத்தில் (anthropos என்ற பொதுச் சொற்றொடருக்கு மாறாக) ஆண் பாலினரைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது என்பது சந்தேகத்திற்கிடமற்றதாகும். இது வசனம் 9ல் உள்ள ஸ்திரீகள் (gunaikas) என்பதற்கு மாறானதாக உள்ளது. தாயெர் அவர்களால்,* aner *என்பது பாலினத்தைக் குறிப்பிடுவதாக, ஆணைப் பெண்ணிலிருந்து வேறுபடுத்திக் குறிப்பிடுவதாகக் கூறப்படுகிறது, இது (அ) ஒரு ஆணையோ - அப். 8:12; 17:12; 1 தீமோ. 2:12 அல்லது (ஆ) ஒரு கணவரையோ - மத். 1:16; மாற். 10:2; யோவா. 4:16; ரோமர் 7:2; 1 கொரி. 7:2* (Thayer, 45) *குறிப்பிடலாம். இருப்பினும், இது "ஒரு பையனிலிருந்து, வயது முதிர்ந்த நபரை வேறுபடுத்திக் காட்டுகிறது - மத்தேயு 14:21; 15:38" என்றும் கூடக் குறிப்பிட்டார் இத்துடன் 1 கொரி. 13:11; எபே. 4:13;*

யாக். 3:2ஐயும் கூட்டிக் குறிப்பிடலாம். இவ்வார்த்தையானது ஆண்களையும் பெண்களையும் ஒரு சேரத் தெளிவாகக் குறிப்பிடும் சில வசனப் பகுதிகளையும் தாயெர் அவர்கள் மேலும் பட்டியலிட்டார் (மத். 14:35; லூக். 11:31; யாக். 1:20). ஆகையால், இவ்வசனத்தின் மீதான விவாதமானது மிகவும் தீவிரமாகும் பொழுது ஒருவர் மிகவும் அதிகமாய்ச் சென்று இவ்வசனமானது பெண்கள் ஜெபத்தில் வழிநடத்த முடியாது என்று நிரூபிப்பதாகக் கூற முனையலாம். அவர்கள் (பெண்கள்) ஜெபத்தில் வழிநடத்த முடியாது என்று இது நிரூபிக்கிறதென்றால், பிறகு அவர்கள் ''எல்லா இடங்களிலும்'' ஜெபத்தில் வழிநடத்த முடியாது. பவுல் "ஜெபத்தில் வழிநடத்துதல்" என்று எழுதவில்லையே. அவர் "proseuchesthai tous andras en panti topo" (எல்லா இடங்களிலும் புருஷர்கள் ஜெபிக்க வேண்டும்) என்று மட்டுமே எடுத்துரைத்தார். andras என்பது ஆண்கள் மட்டுமே (பவுல் 'மட்டுமே' என்பதைச் சேர்க்கவில்லை) அவ்வாறு செய்ய முடியும் என்று அர்த்தப்படுவதை வலியுறுத்திற்று என்றால், ஆண்கள் மட்டுமே ஜெபிக்க முடியும், பெண்களை ஜெபத்திலிருந்து முழுமையாக நீக்கிப் போடுதலாகி விடும். இப்படிப்பட்ட ஒரு கருத்தானது வேதாகமத்திற்கு எதிரானதாக உள்ளது, மற்றும் இது குருக்கள் - பொது நிலையினர் என்பதன் உபதேசத்தையும், மற்றவர்களின் பாவ அறிக்கைகளைக் கேட்டு அவர்களுக்காக வேண்டுகோள் செய்வதை பாவ சங்கீர்த்தனைத் தொட்டிகளிலிருந்து ஆண்கள் மட்டுமே செய்ய முடியும் என்பது போன்ற உபதேசத்தையும் மேம்படுத்துகிறது. பெண்களின் குழுவானது ஆராதனைக்கும் வேத பாட ஆராய்ச்சிக்கும் ஒன்றுகூடலாம் என்று வேத வசனங்கள் போதிக்கின்றன (அப். 16:13-15). கிறிஸ்துவுக்குள்ளான பெண்கள் ஜெபிக்க முடியும் என்பது உறுதி (அப். 12:5, 12; 21:5; 1 கொரி. 11:5; லூக். 2:36-38). ஆண்கள் கொண்டுள்ள அதே மத்தியஸ்தரை அவர்களும் கொண்டுள்ளனர் (1 தீமோ. 2:5ல் பவுல் anthropos - பொதுச் சொல் - என்பதைப் பயன்படுத்தியுள்ளதைக் கவனியுங்கள்). பெண்கள் ''ஜெபத்தில் வழிநடத்துதல்'' பற்றிய திறவுகோல் காரணியானது பெண்கள் சுவிசேஷகர்களாக அல்லது மூப்பர்களாக ஊழியம் செய்வதற்குத் தொடர்புடைய அதே காரணியாகவே உள்ளது. இந்த விஷயம் ஒவ்வொன்றிலும், பெண்கள் பணிந்திருந்து இவ்விதமாய் ஊழியம் செய்வதில் நிலைத்திருக்க இயலாது என்பதே பிரச்சனையாக உள்ளது (இக்கருத்து வசனம் 11 முதல் 15 வரையிலும் கையாளப்பட்டு மேலும் வளர்விக்கப்படும்). ஆண்களும் பெண்களும் கலந்துள்ள கூட்டம் போன்ற பெண்கள் "ஜெபத்தில் வழிநடத்த" - இச்சொற்றொடர் இன்றைய நாட்களில் நம்மால் வடிவாக்கப்பட்டது - மற்றும் பணிந்திருத்தலுடன் இருக்க முடியாதுள்ள சில இடங்கள் இருக்கின்றன, அந்த உண்மையானது, andras என்ற வார்த்தையைப் பவுல் பயன்படுத்தியதற்குக் காரணமாகியுள்ளது, ஏனெனில் அவர் ''எல்லா இடங்களிலும்'' என்ற முன்னிடைச் சொற்றொடரைக் கூட்டினார். இருப்பினும், இவ்வசனத்தில் பவுல் பெண்களின் ஜெப வாழ்வு பற்றிய விதிமுறை களை விதிப்பதில் அல்ல ஆனால் ஆண்களுக்கு உதவுவதிலேயே ஆர்வமுள்ளவராய் இருந்தார். [19]பரிசுத்தமான (Gk.: *hosios*) - "... தூயதான ... சரியான, தேவனுக்கும் அவருடைய பிரமாணங்களுக்கும் ஒத்திருக்கும் வகையில் ... பக்தியுள்ள, தேவபக்தியுள்ள, தேவனுக்குரிய எல்லாக் கடமைகளிலும் கவனம் நிறைந்துள்ள" (Robinson, 520); "... தேவனைப் பிரியப்படுத்துதல் ... பரிசுத்தமான மற்றும் குற்றமற்ற நோக்கத்துடன் தேவனுக்கு ஊழியம் செய்தல் ..." (Arndt and Gingrich, 589). [20]கோபம் (Gk.: *orge*) - "ஒரு பின் சென்றடைதல் ... உணர்வுத் தூண்டுதல்களினால் விளைகின்ற பண்பு அல்லது நிலைப்பாடு ... மனிதனின் எந்த ஒரு வன்மையான கிளர்ச்சி, கடுங்கோபம், கோபம், ... பழிவாங்குதல், தண்டனை ஆகியவற்றை விரும்புதல் உள்ளிட்டது" (Robinson, 514).

[21]வாக்குவாதம் (Gk.: *dialogismos*) - "ஆழ்ந்து ஆராய்தல், எது உண்மை என்பது பற்றி வினா எழுப்புதல் ... தயங்குதல், சந்தேகப்படுதல்" (Thayer, 139); "... தீய நோக்கத்தை மறைவாய் உணர்த்துகிறது" (G. Abbott - Smith, *A Manual Greek Lexicon of the New Testament* [Edinburgh, Scotland: T. & T. Clark, 1948], 109); "... தீய சிந்தனைகள் ... மோசம் போக்கும் முடிவுகளை அளிக்கும் நியாயதிபதிகள் ... விவாதம்" (Arndt and Gingrich, 185). [22]அலங்கரித்தல் (Gk.: *kosmeo*) - "முறையாக வைத்தல், ஏற்பாடு செய்தல், தயாராக்குதல், ஆயத்தப்படுத்துதல், ... நகையணிவித்தல், அலங்கரித்தல் ... நன்கு ஏற்பாடு செய்தல், தோற்றம் கொண்டிருத்தல், தன்னடக்கம் ... நல்லொழுக்கத்துடனும், நன்கு முறைப்படியானதுமான வாழ்வுடன் வாழும் ஒரு மனிதர் ..." (Thayer, 356); "... ஆவிக்குரிய வகையில், மத ரீதியான வகையில், ஒழுக்க ரீதியான வகையில் வனப்பு மிக்கதாக அல்லது வசீகரமுள்ளதாக ஆக்குதல், ... அலங்கரித்தல், மதிப்பளித்தல்" (Arndt and Gingrich, 446). [23]விலையேறப்பெற்ற (Gk.: *poluteles*) - "மதிப்பு மிக்க ... மாபெரும் வெளிப்பகட்டுத் தேவைப்படுகிற, மிகவும் விலை உயர்ந்த ... மேன்மையான, அல்லது மட்டுமீறிய மதிப்புடைய" (Thayer, 530). சிகை அலங்கரிப்பு, பொன் அல்லது முத்துக்கள் போன்றவற்றைப் பற்றிய எதிர்மறையான கூற்றுக்களை சிகையலங்கரிப்பு அல்லது முத்துக்கள் போன்றவற்றை முற்றிலுமாகத் தவிர்க்கின்றதாக எடுத்துக் கொள்ளக் கூடாது. பவுல் பயன்படுத்திய சொற்றொடர்களை எச்சரிக்கையாய்க் கவனியுங்கள். இது ஒரு எதிர்மறையையும் ("கூடாது") மற்றும் ஒரு உறுதிப்பாட்டையும் (அதைத் தொடர்ந்து வரும் "ஆனால்" என்பது) கொண்டுள்ள ஒரு ஒப்பீடு கொண்ட உரையின் கீழைநாட்டு உருவகமாய் உள்ளது. வினையுரிச் சொல்லான (அலங்கரியா) "மல்" என்பது மறுப்பதற்காகப் பயன்படுத்தப்படுகையில் தொடர்புச் சொல்லான "ஆனால்" என்பது உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்பட்டது. தொடர் சொல்லைத் தொடர்ந்து வருவதை உறுதிப்படுத்துவதற்காக சில விஷயங்கள் மறுக்கப்பட்டவைகளாய் உள்ளன. (ஆனால் எந்த ஒரு முற்றான கருத்திலும் இவை எடுத்துக் கொள்ள முடியாது.) (இதை நன்கு புரிந்து கொள்ள ஆங்கில வேதாகமத்தில் இவ்வசனப் பகுதியை வாசிக்க வேண்டும். ஏனெனில் தமிழ் மொழிபெயர்ப்பில் "கூடாது" மற்றும் "ஆனால்" என்ற வார்த்தைகள் இடம் பெறுவதில்லை. இந்தக் கட்டமைப்பு பயன்படுத்தப்பட்டுள்ள பொழுது, எதிர்மறையை ஒருவர் முற்றான கருத்தில் எடுத்துக் கொண்டால், அவர் ஒரு உச்ச அளவுக்குப் பாய்கின்றவராய் இருப்பார். இதை விவரிக்க நான், "நான் வீட்டுக்குச் செல்லவில்லை, ஆனால் பள்ளிக்குச் செல்லுகிறேன்" என்று கூறுவதைக் கவனிப்போம். இதில், நான் ஒருக்காலும் வீட்டிற்குப் போவதில்லை என்று நீங்கள் முடிவு செய்வீர்களா? ஒன்றை வலியுறுத்த நான் இன்னொன்றை மறுத்துரைக் கின்றேன். மொழிநடையானது முற்றானதாயிருந்தாலும், நான் வீட்டுக்குச் செல்வ தில்லை என்பது முற்றான கருத்தல்ல. யோவான் 6:27; 1 கொரிந்தியர் 1:17; 1 பேதுரு 3:3, 4; ரோமர் 12:2; மத்தேயு 6:19, 20 மற்றும்1 தீமோ. 2:9-13 போன்ற வசனப் பகுதிகளில் இவ்வகையான உரை வடிவத்தைக் கவனியுங்கள். இவ்வசனப் பகுதிகளுடன் தொடர்புடைய வகையில், இது பணத்தை வங்கியில் இடுதல் (பூமியில் செல்வங்களைச் சேர்த்து வைத்தல்), முழுக்கட்டுப்பாட்டியலின் சில அடையாளங்கள் (இவ்வுலகத்திற்கு ஒத்த வேஷம் தரித்தல்), அல்லது மீட்கப் படுவதற்கு ஞானஸ்நானம் அவசியம் என்பதை மறுத்தல் (ஏனெனில் ஞானஸ்நானம் கொடுப்பதற்காகப் பவுல் அனுப்பப்பட வில்லை) போன்றவற்றை மறுப்பதால் உச்சநிலைக்கு வழிநடத்தப்பட்டுள்ள விளக்கத்துடன் மக்கள் (சிலர்) பதில்செயல் செய்துள்ளனர். தவறான பயன்பாடான இந்த மாதிரியானது வசனங்கள் 11 முதல் 15 வரை இந்த சந்தர்ப்பப் பொருளில் ஆழ்ந்து சிந்திக்கப்படும் 1 கொரி. 14:34க்கு தொடர்பு படுத்தப்பட்டுள்ளது.

இவ்வசனப் பகுதியில் *(2:9, 10)*, பவுல் பெண்களை விலையேறப் பெற்ற அணிகலனால் அலங்கரித்துக் கொள்வதற்கு மாறாக பண்பினாலும், முத்துக்கள் அல்லது மணப் பொருட்களினால் அலங்கரித்துக் கொள்வதற்கு மாறாக, உயர்வான தர அளவைகள் மற்றும் கருத்துள்ள இச்சை/தன் அடக்கத்தினாலும் அலங்கரித்துக் கொள்ளும்படி வற்புறுத்தினார். முதல் விஷயங்களுக்கு முதலிடம் கொடுங்கள். தேவனுடைய மகிமைக்காக சமான நிலையான வாழ்வை வாழுங்கள். [24]தன்னடக்கமான உடை எது என்பதைத் தீர்மானிப்பதற்கு பழக்கவழக்கம் உதவுமா? ஒரு காலத்தில் தன்னடக்கமான உடையாய் உள்ளது இன்னொரு காலத்தில் தன்னடக்கமற்றதாக முடியுமா? ஒரு குறிப்பிட்ட உடையானது ஒரு நாட்டில் (அல்லது ஒரு நாட்டின் ஒரு பகுதியில்) தன்னடக்கமுடையதாகவும் இன்னொரு நாட்டில் தன்னடக்கமற்றதாகவும் இருக்க முடியுமா? ஒரு சில உடை வகையானது ஒரு நிகழ்ச்சிக்குத் தன்னடக்கமுடையதாகவும் இன்னொரு நிகழ்ச்சிக்குத் தன்னடக்கமற்றதாகவும் இருக்க முடியுமா? இங்கு ஒரு வலிவான முக்கியத்துவமுள்ள கேள்வி உள்ளது: எப்பொழுதுமே தன்னடக்கமுடைய உடை வகைகள் சிலவும் மற்றும் பொதுவாக எப்பொழுதுமே தன்னடக்கமற்ற உடை வகைகள் சிலவும் உள்ளனவா? கேள்விக்குரிய உடைகளைக் கிறிஸ்தவர் அணிய வேண்டுமா? *(1 தெச. 5:21, 22)?* [25]தேவ பக்தி (Gk.: *theosebeia*) - "... தேவனிடத்தில் பயபக்தி, பக்திமுறை, மதம்" (Arndt and Gingrich, 358). [26]தன்னடக்கம் (Gk.: *aidos*) - "... வெட்க உணர்வு, ... பயபக்தி ... அது [எண்ணப்போக்கு] வெட்கக்கேடான செயலுக்கு முந்தியதாகவும் தடை செய்கிறதாகவும் உள்ளது என்று அடிக்கடி கூறப்படுகின்றது ... [எண்ணப்போக்கு] எப்பொழுதுமே ஒரு நல்ல மனிதரைத் தகுதியற்ற செயலில் இருந்து தடை செய்யும்" (Thayer, 14). [27]தெளிந்த புத்தி (Gk.: *sophrosune*) -"மனதின் ஆரோக்கியமான நிலை, நல்லுணர்வு, தெளிந்த தன்மை ... தன்னடக்கம், தெளிவான பண்பு" (Abbott - Smith, 438). [28]கற்றுக்கொள்ளுதல் (Gk.: *manthano*) - "... ஒருவர் அறிவில் பெருகுதல் ... கிறிஸ்துவைப் பற்றிய அறிவுடன் ஊக்குவிக்கப்படுதல் ... கேட்க, தகவல் அளிக்கப்பட ... பயன்பாடு மற்றும் நடைமுறையினால் கற்றுக் கொள்ளுதல்'' (Thayer, 388-89). [29]''அமைதல்'' என்பதற்கான பின்வரும் விளக்கங்களை எச்சரிக்கையாய்க் கவனியுங்கள் (Gk.: *hesuchia*) - "... அமைதல்: வீட்டில் தனது சொந்த வேலையைச் செய்து கொண்டு, மற்றவர்களின் விஷயங்களில் வலிந்து தலையிட்டு இடையூறு ஏற்படுத்தாத ஒருவருடைய வாழ்வைப் பற்றிய விவரிப்பு ... அமைதி" (Thayer, 281); "... அமைதி, சலனமற்ற தன்மை, ஓய்வு, ... அமைதியான வாழ்வு ... சலனமின்மை" (Robinson, 327); "அமைதியின் நிலையைப் பராமரித்தல், ஈடுபட்டுள்ள எண்ணப் போக்கின் மீதான சாத்தியமுள்ள கவனம் செலுத்தும் தன்மை - ஒன்றும் கூறாமல், அமைதியில் நிலைத்திருத்தல்" (Johannes P. Louw and Eugene A. Nida, *Greek - English Lexicon of the New Testament* [New York: United Bible Societies, 1989, (33, 119)]), 2:402. [30]கீழ்ப்படிதல் (Gk.: *hupotasso*) - "கீழாக ஒழுங்கமைத்துக் கொள்ளுதல், கீழ்ப்படிந்திருத்தல்; ... ஒருவர் தன்னை கீழாக்கி கீழ்ப்படிந்திருத்தல்; ஒருவரின் கட்டுப்பாட்டிற்குக் கீழ்ப்படிதல்; ஒருவரின் புத்திமதி அல்லது அறிவுரையை ஏற்று இணங்குதல்" (Thayer, 645).

[31]அதிகாரத்தைச் செயல்படுத்துதல் (Gk.: *authenteo*) - "மேலாக அதிகாரம் கொண்டிருத்தல் ... *1 தீமோ. 2:12*" (Robinson, 106). சில இடங்களில்/நிகழ்வுகளில் ஒரு பெண் போதிக்க முடியும் என்பதால், அவள் ஒரு ஆணின் மீது எப்பொழுதாவது "ஆளுகை'' (அதிகாரம்) கொண்டிருக்க முடியுமா? அல்லது அந்த விஷயத்தில் "கூடாது'' என்பது முற்றானதாக இருக்க வேண்டுமா? சத்தியத்தைப் பகிர்ந்து கொள்வதால் ஒரு பெண் ஒரு ஆணை இயக்க முடியுமா *(அப். 18:24-26*ஐக்

காணவும்)? வேதாகம வகுப்பில் ஒரு கேள்விக்கு பெண்ணொருத்தி பதில் அளித்து ஒரு ஆணின் சிந்தையைச் சத்தியத்தால் இயக்க முடியுமா? (ஆண்கள் உள்ளிட்ட) விருந்தினர்களை சரியான இடங்களில் அமர்த்தும்படி (உணவு) மேசைக்கு ஒரு பெண் வழிநடத்திச் செல்ல முடியுமா? இன்னொருவருக்கு வழிகாட்டுதல் அளித்தும் கூட அவள் இன்னும் பணிந்து இருக்க முடியுமா? வேத வசனங்கள், ஒரு பெண் சுவிசேஷகராயிருப்பதைத் (அந்த ஊழியத்தின் இயல்பின் நிமித்தம் [தீத்து 1:5; 2 தீமோ. 4:2-5; 1 தீமோ. 1:3-5]) தடை செய்கின்றன மற்றும் அவள் ஒரு மூப்பராக அல்லது ஆயராக இருப்பதையும் (அவர்களின் ஊழிய இயல்பு மற்றும் தகுதிகளினிமித்தம் [1 தீமோ. 3:2; தீத்து 1:5-9; 1 தெச. 5:12; எபி. 13:17]) தடை செய்யும். இருப்பினும், நாம் பெண்கள் செய்யும்படி கர்த்தர் விரும்புகின்ற நல்ல ஊழியங்களிலிருந்து அவர்களை நீக்கி விடாமல் இருப்பதில் கவனமாய் இருக்க வேண்டும். [32]பிள்ளைப் பேறு (Gk.: *dia tes teknogonias*) - பிறப்புக்குரிய, பெண் தன்மை. [33]This view is verified in Victor Hoven, *The New Testament Epistles* (Grand Rapids, Mich.: Baker Book House, 1959), 90, and Charles J. Ellicott, *Ellicott's Commentaries on The Epistles of Saint Paul*, vol. 2, Philippians, Colossians, Philemon, 1 Timothy, 2 Timothy, Titus (Philadelphia: Warren F. Draper, 1868), 54. [34]பரிசுத்தம் (Gk.: *agiasmos*) - "அர்ப்பணம் செய்தல்" (Thayer, 6).